இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சகோதரர் சகோதரிகளே,எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும்; வளமையிலும் வாழத் தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. ஆயினும் நான் பட்ட துன்பத்தில் நீங்கள் பங்கு கொண்டது உங்கள் நன்மனத்தைக் காட்டுகிறது. பிலி 4: 12-14

# உண்மையான சூழலியல் ஊடகத்தின் தேவை அதிகரித்துள்ளது

## திருத்தந்தை

**வத்தக்கான்:** கோவிட்-19 கொள்ளை நோய், நாடுகளின் எல்லைகள், கலாச்சாரம், அரசியல் போன்ற எவ்விதப் பாகுபாடுமின்றி, அனைவரையும் பாதித்துள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து நாம் மீள்வதற்கு கிடைக்கும் அரிய வாய்ப்புக்களிலிருந்து ஒதுங்கிக்கொள்ளக் கூடாது என திருத்தந்தை அறிவுறுத்தினார்.

இக்காலத்தில், அதிர்ச்சியூட்டும் முறையில் அதிகரித்துவரும் பல்லுயிர்கள் அழிவு, இயற்கைப் பேரிடர்கள், மற்றும், கொள்ளைநோயின் தாக்கம் ஆகியவை மிகவும் கருத்தூன்றி ஆராயப்படவேண்டும் என்றும், இவை வறியோரையும், நலிந்தோரையும் மிகவும் பாதிக்கின்றன என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இதழ் ஒன்றில் எழுதியுள்ளார்.

"Green and Blue" என்ற இத்தாலிய இதழுக்கு திருத்தந்தை எழுதியுள்ள ஆசிரியர் பக்கத்தில், இக்காலத்தில் நாம் எதிர்கொள்ளும் இத்தகைய எதார்த்த நிலைகளுக்கு நாம் புறமுதுகு காட்ட இயலாது என்றும், இன்றைக்கு, ஓர் உண்மையான சூழலியல் ஊடகத்தின் தேவை அதிகரித்துள்ளது என்றும்,அது உடனடித் தேவையாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மனிதரின் இறுதிநிலைக்கும், சுற்றுச் சூழலுக்கும் இடையே நிலவும் தொடர்புகளைச் சுட்டிக்காட்டி அவற்றை



விளக்கவேண்டியதும், நாம் உயிர்வாழ்வதற்கு, சுற்றுச்சூழலில் மாற்றம் அவசியம் என்பதை, நாடுகளின் தலைவர்கள், தொழில்முனைவோர், வர்த்தகர்கள், குடிமக்கள் போன்ற எல்லாருக்கும் எடுத்துரைக்கவேண்டியதும் ஊடக - வியலாளர்களின் பணி என்பதை திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

அதிகம் துன்புறும் மக்கள் தொடங்கி, அனைத்து மனிதரின் மாண்பை எப்போதும் மதிப்பதை வைத்து, இதழியலின் தரம் கணிக்கப்படும் என்றும், நீடித்த நிலையான வாழ்க்கைத்தரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, எல்லாருக்கும் போதுமான உணவு மற்றும், தண்ணீர் ஆகியவை, முழுமனித சமுதாயத்தின் வருங்காலத்தை வளமானதாக்குவதற்கு அடிப்படையானவை என்றும், திருத்தந்தை கூறியுள்ளார்.

தன்னார்வம் மற்றும், தணியாத அதிகாரத் தாகம் ஆகியவற்றோடு, பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முயற்சித்தால், தற்போதைய நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் ஒன்றுசேர்ந்து முயற்சித்தால், இப்பூமிக்கோளம் தற்போதைய நெருக்கடிகளிலிருந்து உயிர்த்தெழ முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

“நம் பொதுவான இல்லமாகிய இந்தப் பூமியைப் பாதுகாப்பதற்கு முன்வைக்கப்படும் உடனடி சவால், பொருள்கள் மாறும் என்பதை அறிந்தவர்களாய், நீடித்த, நிலையான மற்றும், ஒருங்கிணைந்த முன்னேற்றத்தைத் தேடுவதில், மனிதக் குடும்பம் முழுவதும் ஒன்று சேரவேண்டும் என்ற கடமையையும் உள்ளடக்கியுள்ளது” என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

# ‘CHARIS மலேசியா’ அருங்கொடை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது

பினாங்கு : 2015 ஆம் ஆண்டில், திருத்தந்தை பிரான்சிஸ் "உலக அருங்கொடை மறுமலர்ச்சி சேவை இயக்கங்களின் பொறுப்பாளர்களையும் கத்தோலிக்க சகோதரத்துவ உடன் படிக்கை சமூக அமைப்புகளையும் இணைத்து ஓர் அகில உலக அருங்கொடை மறுமலரச்சி இயக்கமாக உருவாக்குவதன் நன்மைகளைப் பற்றி சிந்திக்க அழைப்புவிடுத்தார்.

இதனிமித்தம், CHARIS எனும் அமைப்பு கடந்த 31 அக்டோபர் 2018 அன்று தோற்றுவிக்கப்பட்டது.

CHARIS-ன் நோக்கம் கத்தோலிக்க அகில உலக திருஅவையில் அருங்கொடை மறுமலர்ச்சிக்கான புதியதொரு, ஒருங்கிணைக்கப்பட்ட சேவையை வழங்குவதாகும். உலகம் முழுவதுக்குமான கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சியில் புதுப்பித்தலின் தேவைகளுக்கு இந்த CHARIS சேவையாற்றும் என அறிவிக்கப்படுள்ளது.

அகில உலக CHARIS அமைக்கப்பட்டதையொட்டி, மலேசியாவிலும் **'CHARIS மலேசியா'** கடந்த ஆகஸ்டு 10, 2020-ல் உருவாக்கப்பட்டது. . இதற்கு மலேசிய ஆயர்கள் மன்றம் கடந்த ஆகஸ்டு 13, 2020-ல் அனுமதி அளித்தது. தீபகற்ப மலேசியா, சபா மற்றும் சரவாக் ஆகிய வட்டாரங்களின் கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கத்திற்கென ஒரு தேசிய அமைப்பு ஏற்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த CHARIS எனும் ஒருங்கிணைக்கப்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் நான்கு முக்கிய நோக்கங்கள் யாதெனில்:

1. தூய ஆவியாரில் திருமுழுக்கு வாயிலாக தூய ஆவியாரில் வாழ்வை ஊக்குவித்தல்.

2. திருஅவைக்குள் ஒன்றிப்புக்கு வழிவகுத்தல்.

3. கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவித்தல்.

4. ஏழைகளுக்கும் ஒதுக்கப்பட்டோருக்கும் சேவை செய்தல்.

இதனிமித்தம் மலேசியாவில் செயல்படும் அனைத்து அருங்கொடை செபக்குழுக்களுக்கும், இந்த CHARIS மலேசியா அமைப்பில் பதிவு செய்துகொள்ள அழைப்புவிடுக்கப்படுகிறது. தத்தம் மறைவாட்டங்களின் அருங்கொடை ஒன்றிப்புக்கான பணிக்குழு மேற்கூறிய குழுக்களிலிடமிருந்து விபரங்களைப் பெற்று CHARIS மலேசியாவிடம் ஒப்படைக்கலாம்.

இந்த மண்ணில் இறையரசை கட்டி எழுப்பும் பணியில் ஈடுபடும் வேளையில் இந்த **CHARIS மலேசியா** அமைப்புக்காக இறைவேண்டல் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறோம்.



*ஆயர் டத்தோ செபஸ்தியன் பிரான்சிஸ்,*

CHARIS மலேசியாவின் அலுவலகத்தின முகவரி

290, Macalister Road, 10450 Georgetown, Pulau Pinang, Malaysia. Email : charis-malaysia.NSC@gmail.com

*+ஆயர் மேதகு செபஸ்தியன் பிரான்சிஸ்,*
*பினாங்கு மறைமாவட்டம்,*
*ஆலோசகர், CHARIS மலேசியா இயங்கம்*

# வாரம் ஓர் அலசல்: அனைவரும் உடன்பிறந்தோர் - பகுதி I

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மூன்றாவது திருமடலாக வெளிவந்துள்ள "அனைவரும் உடன்பிறந்தோர்" என்ற திருமடல், எட்டு பிரிவுகளாக, ஒவ்வொன்றும் பல இணை தலைப்புக்களைக் கொண்டு, 287 எண்களாக, திருத்தந்தையின் சிந்தனைகளை அருமையாக அள்ளித் தெளித்துள்ளன. அவற்றை வாரம் ஒரு பகுதியாகக் காண்போம்.

**பகுதி I**
**அனைவரும் உடன்பிறந்தோர் -**

அனைவரும் உடன்பிறந்தோர் என்ற திருமடல், ஒரு, சமுதாயத் திருமடல். இதன் தலைப்பு, அசிசி நகர் புனித பிரான்சிசின் "அறிவுரைகள்" என்பதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. அப்புனிதர் அறிவுரைகளை வழங்குகையில், சகோதரரே, சகோதரிகளே என்ற சொல்லாடல்களையே பயன்படுத்தியுள்ளார், மற்றும், நற்செய்தியின் நறுமணத்தால் நிரம்பியுள்ள ஒரு வாழ்வுமுறையையே அவர்களுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

இந்த புனிதர், கோட்பாடுகளைப் புகுத்துகையில், சொற்போரைத் தொடுக்கவில்லை, மாறாக, அவர் எளிமையாக, கடவுள் அன்பையே பரப்பினார். அவர், எல்லாருக்கும் தந்தையானார், மற்றும், உடன்பிறந்த சமுதாயத்தை அமைப்பதற்குத் தூண்டினார். இந்த திருமடல், உடன்பிறந்த உணர்வு மற்றும், சமுதாய நட்புறவை நோக்கி, உலக அளவில் ஓர் ஏக்கத்தைத் தூண்டும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது.

நாம் எல்லாரும் சகோதரர், சகோதரிகள், அதாவது உடன்பிறப்புகள். ஏனெனில், நாம் எல்லாரும், ஒரே படைத்தவரின் பிள்ளைகள், ஒரே படகில் உள்ளவர்கள். இதனால், மனிதக் குடும்பத்தில் பொதுவான உறுப்பினர்களாக நாம் உள்ளோம். எனவே, உலகமயமாக்கப்பட்ட, மற்றும், ஒன்றோடொன்று தொடர்புகொண்டுள்ள உலகில், ஒன்றாய் இருந்தால் மட்டுமே, நாம் காப்பாற்றப்படுவோம் என்ற விழிப்புணர்வு தேவைப்படுகின்றது.

உடன்பிறந்த உணர்வுக் கலாச்சாரத்தை வளர்ப்பதன் வழியாக, ஒவ்வொரு மனிதரும் அன்புகூரப்படவேண்டும், இது உலகளாவிய உறவுகளில் பயன்படுத்தப்படவேண்டும். சகோதரத்துவம், அதாவது உடன்பிறந்த உணர்வு, ஏதோ ஒரு புதுப்பாணியோ அல்லது, நாகரீக முறையோ அல்ல, மாறாக, அது, தெளிவான செயல்கள் வழியாக, சிறப்பாக, அரசியல் செயல்முறைகள் வழியாக வெளிப்படுத்தப் படவேண்டும்.

இந்த செயல்முறை, நிதி ஆதாயத்திற்கு அடிமையாக இருந்துவிடக் கூடாது, மாறாக, ஒவ்வொரு மனிதரின் மாண்பும் மையத்தில் வைக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் வேலைவாய்ப்பு உறுதிசெய்யப்படுவதாக அமையவேணடும். அதனால் ஒவ்வொரு மனிதரும் தங்களின் திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியும்.

நீதி அதிகமதிமாக நிலவுகின்ற உலகு எட்டப்படுவதற்கு, அமைதி ஊக்குவிக்கப்பட வேண்டும். அமைதி என்பது போர்கள் இன்றி இருப்பது மட்டுமல்ல, அது, எல்லாருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கிக்கொடுப்பதில் தொடர்புடையது. அது, ஒருவர் ஒருவரை முன்னேற்றுதல் என்ற பெயரில், கலந்துரையாடல் வழியாக, நீதியை நோக்கி உழைப்பதாக அமையவேண்டும்.

**கோவிட்-19 சூழலில் திருமடல் தயாரிப்பு**

கோவிட்-19 கொள்ளைநோய் எதிர்பாராத விதமாய் உலக அளவில் பரவியது. இந்த கொள்ளைநோய் உலக அளவில் உருவாக்கியுள்ள நலவாழ்வு நெருக்கடிகள், இந்த உலகில், நாம் அனைவரும், ஒரே மனிதக் குடும்பமாக வாழ்வதற்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்ற திருத்தந்தையின் கருத்தாழமிக்க சிந்தனையை விளக்குவதற்கு மேலும் உதவியுள்ளன.

அதாவது, வாழ்க்கையில் எவரும் தனிமையை எதிர்கொள்ளக் கூடாது. நாம் எல்லாரும் சகோதரர், சகோதரிகளாக, உடன்பிறந்தோராக, ஒரே மனிதக் குடும்பமாக வாழும் கனவை உண்மையாக்குவதற்கு காலம் கனிந்துள்ளது என்ற எதார்த்தத்தை திருத்தந்தை மிக அழகாக, இந்த திருமடலில் எடுத்துரைத்துள்ளார் (எண்கள் 7-8).

*-தொடரும்* ஆர்.கே.

# 10 இலட்சம் சிறார் செபிக்கும் செபமாலை உலகை மாற்றும் -இறைவேண்டலுக்கு அழைப்பு

இந்த உலகம், இதுவரை கண்டிராத அளவிற்கு, நெருக்கடி நிலைகள், இவ்வாண்டில் எதிர்கொள்ளப்படுகின்றன, இதனால், இவ்வாண்டில், உலகெங்கும், ஒரே நேரத்தில், சிறார் இணைந்து செபிக்கும் செபமாலை மிகவும் முக்கியமானது குறிப்பிட்டுள்ளது.

இந்த பக்தி முயற்சி குறித்து, உலகளாவிய சிறாருக்கு மடல் அனுப்பியுள்ள, Aid to the Church in Need அமைப்பின் தலைவர் கர்தினால் Mauro Piacenza அவர்கள், இப்போதைய துன்பம் நிறைந்த



இம்மாதம் 18ம் தேதி "பத்து இலட்சம் சிறார் செபமாலை செபித்தல்" என்ற நிகழ்வில், பங்குத்தளங்கள், பாலர் பள்ளிகள், ஏனையப் பள்ளிகள், மற்றும், குடும்பங்கள் ஆகியவை இணையுமாறு, Aid to the Church in Need (ACN) எனப்படும், தேவையில் இருக்கும் திருஅவைகளுக்கு உதவும், உலகளாவிய பாப்பிறை அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

உலக மறைபரப்பு ஞாயிறாகிய இம்மாதம் 18ம் தேதி இந்த உலகளாவிய பக்தி முயற்சியை நடத்தவிருக்கும் அந்த அமைப்பு, உலகில் ஒற்றுமை மற்றும், அமைதியைக் கொணரச்செய்வதற்கு, இது உதவும் என்று கூறியுள்ளது.

இந்த உலகம் இதுவரை கண்டிராத அளவிற்கு, இவ்வாண்டில், நலவாழ்வு மற்றும், வாழ்வாதாரத்தில் நெருக்கடி நிலைகள் எதிர்கொள்ளப்படுகின்றன, இதனால், இவ்வாண்டு, உலக அளவில் ஒரே நேரத்தில் சிறார் இணைந்து செபிக்கும் செபமாலை மிகவும் முக்கியமானது எனவும், அந்த அமைப்பு சூழல்களில், நாம் ஒன்றுசேர்ந்து பணியாற்றவேண்டும், மற்றும், ஒருவர் ஒருவருக்காக உதவவேண்டும் என்று கூறியுள்ளார்.

அதேநேரம், மிகப்பெரும் உதவி கடவுளிடமிருந்தே வருகின்றது என்பதையும் நாம் மறக்கக்கூடாது என்று கூறியுள்ள கர்தினால் Piacenza அவர்கள், இதனாலாயே, பத்து இலட்சம் சிறார் இணைந்து செபமாலை செபிக்கும் பக்தி முயற்சியை மேற்கொண்டு வருகிறோம் என்று கூறியுள்ளார்.

இந்த செபமாலை முயற்சியை, அக்டோபர் 18, ஞாயிறன்றோ, அல்லது, அதைத் தொடரும், அக்டோபர் 19-ஆம் தேதி திங்களன்றோ, பள்ளிகளிலும், பாலர் பள்ளிகளிலும் சிறாரோடு இணைந்து செபிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள கர்தினால் Piacenza அவர்கள், பத்து இலட்சம் சிறாரின் செபம், இந்த உலகை மாற்றமுடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (Zenit)

*-மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

# விண்ணரசின் மாட்சியை உணர்ந்து வாழ்வோம்

இறைவன் தரும் விருந்திது அதை உண்ண தடையென்ன. உறைய வரும் இறைவனை நாம் ஏற்கத் தடையென்ன என்ற பாடலை திருவிருந்து வேளையில் பாடுகிறோம். ஆம், இன்றைய நற்செய்தி இந்த திருவிருந்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நற்செய்தி வாசகத்தில் இயேசு கிறிஸ்து விண்ணரசை திருமண விருந்துக்கு ஒப்பிட்டு விளக்குகிறார் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம் அந்த உவமையில், அரசர் பெரிய விருந்தொன்றை ஏற்பாடு செய்துவிட்டு, ஏற்கனவே அழைப்புப் பெற்றவர்களை தன்னுடைய பணியாளர்களைக் கொண்டு அழைத்து வரச் சொல்கிறார். ஆனால் அழைப்புப் பெற்றவர்களோ ஒவ்வொரு சாக்குப்போக்குச் சொல்லி, வரமறுக் கிறார்கள். இதனால் அரசர் சினம் கொள்கிறார். எனவே வழியோரங்களிலும், சாலையோரங்கிலும் இருந்தவர்களை அழைத்துவரச் சொல்லி, அவர்களுக்கு விருந்துபடைக்கின்றார்.

இங்கே அரசன் தரும் விருந்தானது, இறைவன் தரும் விருந்துக்கு ஒப்பாகப் பேசப்படுகிறது.

அழைக்கப்பட்டோர் வராமல், தங்களுடைய சொந்த வேலைகளுக்குச் சென்ற மனிதர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்கு உரியது. இறைவனின் அழைப்பு அரிதானது, அது எல்லாருக்கும் கிடைக்காத ஒன்று. அப்படிப்பட்ட அழைப்பு கிடைத்திருந்த



போதும் அதைப் பயன்படுத்தத் தெரியாமல் இருந்த மனிதர்களின் நிலைதான் வேதனை அளிப்பதாக இருக்கின்றது. இறைவனின் உன்னத விருந்தை ஏற்க மறுக்கின்றனர். இரண்டாவதாக அழைப்புப் பெற்ற மனிதர்களுள் ஒருவர் சொல்லும் சாக்குப் போக்கு, "நான் கடைக்குச் செல்கிறேன்' என்பதாகும். அநேகர் பணத்துக்காக உழைக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, இரவு பகல் என்று உழைக்கிறார்கள். பணம் மட்டும்தான் நிம்மதியைத் தரும் என்று வாழ்கிறார்கள். இதன் விளைவு நம்மில் அநேகருக்குத் தெரியும்.

இறுதியாக அழைப்புப் பெற்ற மனிதன் சொல்லக்கூடிய சாக்குப்போக்கு, "எனக்கு இப்போதுதான் திருமணம் ஆயிற்று; ஆகையால் என்னால் வரமுடியாது" என்பதாகும். இதனை நாம் ஆண்டவனுக்கு முக்கியத்துவம் தராமல், மனித உறவுகளுக்கு, அவை தரும் அற்ப சுகங்களுக்கு முக்கியத்துவம் தரும் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இறைவன் தரும் விருந்தானது, இறைவாக்கினர் எசாயாப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் படிப்பதுபோன்று சுவைமிக்கது. அவ்விருந்தில் கலந்துகொள்வோரின் துன்பங்கள், துயரங்கள், கண்ணீர் கவலைகள் அத்தனையும் போக்கப்படும் என்பது திண்ணம்.

ஆகவே, இத்தகைய இறைவனின் விருந்தில் நாம் கலந்துகொள்ள முயற்சி எடுக்காமல், பணத்திற்கும், பொருளுக்கும், உடல் சார்ந்த ஆசைகளுக்கும் அடிமையாகி வாழக்கூடிய நிலை பரிதாபத்திற்கு உரியது. ஆதலால், இறைவனுக்கு, அவர் தரும் அழைப்பிற்கு முக்கியத்துவம் தந்து வாழ்வோம். நிச்சயமாக இறைவன் நம்முடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வார் என்பதில் நம்பிக்கை வைத்து வாழ்வோருக்கு வாழ்வு உண்டு.

*-ஆவி. டேவிட், குளுவாங்*

**பொதுக்காலம் 28-ஆம் ஞாயிறு**

எசே 25: 6-10a
திபா 23: 1-3a. 3b-4. 5. 6 .
பிலி4: 12-14, 19-20
மத் 22: 1-14

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**